# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.138/2013 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | எ.சா–04 (DW–04) |
| **பெயர்** | :– | மணிவண்ணன் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | ஆறுமுகம் |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜூலைதிங்கள் 28 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

2 ஆம், 3 ஆம், 6 ஆம், 9 ஆம், 13 ஆம், 14 ஆம், 15 ஆம், 16 ஆம், 17 ஆம் எதிரிகள் தோன்றினர். 01 ஆம், 5 ஆம், 7 ஆம், 11 ஆம், 18 ஆம் எதிரிகள் தோன்றவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், வங்குடி ஊரை சேர்ந்தவன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்து-போனர்களில் ஒருவரான பிரபு என் அண்ணன் மகன். காசிநாதன், அவருடைய மகன்கள் இருவர், சுரேஷ் என்பவர் ஆகியோரும் இறந்துவிட்டனர். காசிநாதன் எனக்கு பங்காளி. இறந்துபோனவர்கள் சாராயம் காய்ச்சும் தொழில் செய்தார்கள். காசிநாதன் குடும்பத்துடன் சேர்ந்து எதுவும் செய்யகூடாது என்று நான் பிரபுவை கண்டித்தேன். நான் சொன்னதை அவர் கேட்கவில்லை. காசிநாதன் குடும்பத்துடன் சேர்ந்து கள்ளச்சாராயம் காய்ச்சும் வேலையில் அவனும் ஈடுபட்டான்.

சுமார் 15 ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் ஊரில் கூச்சல் சத்தம் கேட்டது. நான் ஓடி பார்த்தேன். ஊர்காரர்கள் அங்கும் இங்கும் ஓடினார்கள். அப்போது காவல் துறையினர் ஊரில் இருந்தனர். கொலை நடந்துவிட்டது என்று ஊரில் சொல்லிக்கொண்டனர். சுமார் 300 க்கும் அதிகமான காவல் துறையினர் வந்தனர். அப்போது நேரம் சுமார் காலை 8.00 அல்லது 9.00 மணி இருக்கும். தேசிங்குபாலன் என்பவர் கொலையுண்ட பிறகு ஊரில் காவலர்கள் சிலர் பாதுகாப்பு பணியில் இருந்தனர்.

காவல் துறையினர் வந்து இறந்துபோனவர்களின் உடலை சடலகூராய்வு செய்ய ஏற்றிச்சென்றனர். காசிநாதன் குடும்பத்தினர் ஊருக்கு தெற்கில் ½ கி.மீ தூரத்தில் வசித்தனர். அங்கு அவர்களுக்கு நிலம் உள்ளது. தேசிங்குபாலன் கொலை நடந்தபின் அவர்கள் அங்கு சென்றனர். ஊரில் இருந்த நிறைய ஆட்களை காவல் துறையினர் மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அதில் நானும் இருந்தேன். இறந்துபோன பிரபு என் அண்ணன் மகன் என்று சொன்னேன். என்னை விசாரித்தபின் விட்டுவிட்டார்கள்.

தேசிங்குபாலனை காசிநாதன் குடும்பத்தினர்தான் கொன்றனர். காசிநாதன் குடும்பத்தினர் கள்ளச்சாராயம் காய்ச்சியதால் காவல் துறையினர் ஊரில் வந்து தொந்தரவு கொடுத்தனர். உங்களால்தான் பிரச்சனை என்று ஊர்காரர்கள் அவர்களிடம் சென்று ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டனர். அதனால் தேசிங்குபாலனை கொன்றுவிட்டனர். தேசிங்குபாலன்தான் முன்நின்று கேட்டார் அதனால் கொன்றுவிட்டனர்.

**குறுக்கு விசாரணை**

பிரபு எனக்கு சொந்த அண்ணன் மகன் இல்லை. ஒன்றுவிட்ட அண்ணன் மகன். இந்த வழக்கில் இறந்துபோன ஐவரை யார் கொன்றது என்றால் எனக்கு தெரியாது. தேசிங்குபாலனை யார் கொன்றது என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். தேசிங்குபாலன் இறந்ததும் கலவரத்தில் ஊரில் இருந்த காசிநாதனின் வீட்டை அடித்து நொருக்கிவிட்டதால் காசிநாதன் குடும்பத்தினர் ஊருக்கு வெளியில் வசித்தனர். காசிநாதன் குடும்பத்தினர் ஆடு, மாடுகள் அதிகளவில் வைத்திருந்தனர் என்றால் சரிதான். அந்த கலவரத்தில் ஆடு, மாடுகளை பிடித்து சென்றுவிட்டனர் என்றால் இல்லை. ஓடிவிட்டன. எதிரிகள் ரவிச்சந்திரன், காளிதாசன், பாரதிதாசன் ஆகியோர் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். ரவிச்சந்திரனின் தாயாருக்கு நான் தாய்மாமன் என்றால் சரிதான்.

இறந்துபோன ஐவரையும் ரவிச்சந்திரன் வகையறாவினர்தான் கொன்றார்கள் என்றும் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. காசிநாதனுக்கும் தேசிங்குபாலனுக்கும் வழித்தடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. தேசிங்குபாலன் அவரது நிலத்திற்கு காசிநாதனின் நிலத்தை தாண்டிதான் செல்லவேண்டும் என்றால் அது எனக்கு தெரியாது.

வழக்குச் சம்பவத்திற்குமுன் 01-ஆம் எதிரி ரவிச்சந்திரன் அந்த ஊர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. வங்குடி ஊரிலுள்ள காளியம்மன் கோவிலை காசிநாதன் குடும்பத்தினர் நிருவகித்தனர் என்றால் இல்லை. கோவில் நிருவாகம் சம்மந்தமாக காசிநாதன் குடும்பத்தினர் மற்றும் தேசிங்குபாலன், ரவிச்சந்திரன் குடும்பத்திற்கும் மாறுபட்ட கருத்து இருந்தது என்றால் இல்லை. தேசிங்குபாலன் கொலை சம்பவத்திற்கு காசிநாதன் குடும்பத்தினர்தான் காரணம் என்று எதிரிகள் கருதியதாலும் கோவில் நிருவாகம் சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனையினாலும் தேர்தல் முன்விரோதத்தினாலும் எதிரிகள் காசிநாதன் குடும்பத்தினர்மீது வன்மம் கொண்டு வழக்குச் சம்பவத்தை நிகழ்த்தினர் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள பல எதிரிகள் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.